**முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை:-**திருமதி ஆ.முத்துசாரதா, பி.எல்., பி.ஜி.டி.பி.எம்.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>இந்திய விவாகரத்து அசல் மனு எண்-73/2023</u>**
(CNR No. TNDG010040802023)

எம்.பாத்திமா தேன்மொழி,
க/பெ. ஏ.பிலிப்குமார் .. மனுதாரர்/ மனைவி

// எதிராக //

ஏ.பிலிப்குமார்,
த/பெ. அந்தோணிராஜ் .. எதிர்மனுதாரர்/கணவர்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்னர் 02.07.2023 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 16.04.2026 ம் தேதியன்று வாதுரைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.ஆபிரகாம் இளையராஜா அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர் பி.திருவேங்கடம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இரு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் யாவற்றையும் பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்த

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் இம்மனுவினை இந்திய விவாகரத்து சட்டம் பிரிவு 10(1)(ix) மற்றும் 10(1)(x)ன் படி தாக்கல் செய்து மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும்

கடந்த 21.02.2011ம் தேதி திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் , புனித பெரியநாயகி அன்னை தேவாலயத்தில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து மனுதாரருக்கு எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து உத்தரவு வழங்கக்கோரியும், இம்மனுவின் செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார்.

2) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்–</u>

மனுதாருக்கும், எதிர்மனுதாருக்கும் கடந்த 21.02.2011ந்தேதி கிறிஸ்தவ முறைப்படியும் ஜாதி ஆச்சாரப்படியும், பெரியோர்களின் சம்மதத்துடன் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர், புனித பெரியநாயகி அன்னை தேவாலயத்தில் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு மனுதாரரின் பெற்றோர்கள் 3 பவுன் தங்க நகைகளும் ரூ.1,00,000/– மதிப்புள்ள பண்ட பாத்திர சீர்வரிசைப் பொருட்களும் மனுதாரருக்கு சீதனமாக கொடுத்திருக்கிறார்கள். மேற்படி திருமணம் தேவாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருமணத்திற்குப்பின் எதிர்மனுதாரும், மனுதாரும் எதிர்மனுதாரரின் வீட்டில் வாழ்க்கை மேற்கொண்டதில் திருமண வாழ்க்கையின் பயனாக கடந்த 18.11.2011ம் தேதி அஜித் செல்வராஜ் என்ற ஆண் குழந்தையும், 05.04.2014ந்தேதி கிங்ஸ்டன் என்ற ஆண் குழந்தையும் பிறந்திருக்கிறார்கள். அதுவரை மனுதாரரை சந்தோசமாக வைத்திருந்த எதிர்மனுதாரர், குழந்தை பிறந்ததிலிருந்தே மனுதாரரை தன் மனைவி என்றும் கூட பாராமல் அவரது பெற்றோரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு எதிர்மனுதாரர் வெளிநபர்கள் முன்னிலையில் தகாத தீய வார்த்தைகளைச் சொல்லி

திட்டுவதையும், மனுதார் தனக்கேற்ற மனைவியல்ல என்று கூறி அடித்து துன்புறுத்தத் தொடங்கினார். எதிர்மனுதாரரின் செயல்களைக் கண்டு மன அதிர்ச்சி அடைந்த மனுதார் தனது குடும்ப சூழ்நிலைகளையும், தன் குழந்தைகளின் எதிர்காலத்தையும், தனது பெற்றோர்களின் நிலைகளையும் கருத்தில் கொண்டு எதிர்மனுதாரரின் அக்கிரமச் செயல்களை பொறுத்துக் கொண்டு இருந்தார். காலப்போக்கில் எதிர்மனுதார் அளவுக்கதிகமாக குடித்துவிட்டு மனுதாரரையும், அவரது பெற்றோர்களையும் கடுமையான, நாகூசச் செய்யும் கெட்ட வார்த்தைகளை சொல்லி திட்டுவதையும், கண்மூடித்தனமாகவும் மூர்க்கத்தனமாகவும் மனுதாரரையும், குழந்தைகளையும் தாக்குவதையும் வாடிக்கையாகக் கொண்டதுடன், குழந்தைகளுக்கும் மனுதாரருக்கும் உணவிற்கு கூட பணம் தராமல் வீட்டில் சமைப்பதற்கு எந்த பொருளையும் வாங்கி தராமலும் எதிர்மனுதாரர் அவரது இஷ்டத்திற்கு ஊதாரித்தனமாக இருந்துவந்ததால், மனுதாரர் வேறு வழியில்லாமல் கூலி வேலைக்கு சென்று அதில் வரும் பணத்தில் 2 குழந்தைகளை பராமரித்து வாழ்ந்து வந்தார். ஆனால் எதிர்மனுதாரர் மனுதாரரை இரவு நேரங்களில் வீண் சண்டை செய்து பெண் என்று பாராமல் வீட்டுவெளியே ரத்தி விட்டு கதவை சாத்தி விடுவதும் பின்பு பல மணி நேரம் கழித்து கதவை திறந்து வீட்டிற்குள் வந்தால் தனியாக இருட்டறையில் அடைத்து வைத்து கொடுமை செய்வதுமான செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார். இதனால் எதிர்மனுதாரரின் கொடுமையை தாங்க முடியாத மனுதாரர் மன வேதனையாலும் சொல்ல முடியாத கஷ்டத்திலும்

உடலளவிலும் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வந்துள்ளார். பலமுறை மனுதாரர் ஊர் பெரியவர்களையும், உறவினர்களையும் அழைத்து வைத்து எதிர்மனுதாரருக்கு புத்திமதி கூறியும் எதிர்மனுதாரர் திருந்தாமல் தொடர்ந்து கொடுமைகள் செய்து வந்தநிலையில், கடந்த 04.05.2018 ம் தேதி மனுதாரர் வீட்டில் இருந்த பொழுது எதிர்மனுதாரர் அளவுக்கு அதிகமாக குடித்துவிட்டு வந்து மனுதாரரை சந்தேகப்பட்டு அடித்து கொடுமைப்படுத்தியதுடன், மனுதாரரை வேறு நபர்களுடன் தொடர்புப்படுத்தி பேசி அவரது பெண்மைக்கு களங்கம் ஏற்படும் விதமாக தொடர்ந்து நடந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டு ஒரு மனநிலை பாதித்தவர் போல் எதிர்மனுதார் நடந்து வந்தார். மேலும் எதிர்மனுதார் மனுதாருக்கு சொல்லெண்ணாத்துயரமும், பயங்கரமான மனவேதனையும், மனக்காயமும் (Cruelty) மனஉளைச்சலும் ஏற்பட்டு என்ன செய்வதென்றே தெரியாமல் மனபாரத்தோடு எதிர்மனுதாரரோடு வாழ்க்கை நடத்திவந்த சூழ்நிலையில், கடந்த 08.05.2018 ம் தேதி எதிர்மனுதாரர் அளவுக்கதிகமாக மது அருந்திவிட்டு வந்து நிலைக்கொள்ளா போதையில் மனுதாரரை மரியாதையாக வீட்டைவிட்டு ஓடிவிடு இல்லையென்றால் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி குழந்தைகளுடன் வீட்டைவிட்டு வெளியே துறத்திவிட்டார். இதனால் மனுதாரர் தனது உயிருக்கு பயந்தும் குழந்தைகளின் எதிர்காலத்தை எண்ணியும், வேறுவழியில்லாமலும், தன் பெற்றோர் வீட்டில் இருந்து வருகிறார். சேர்ந்து வாழ பலமுறை எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிட்டது. இனிமேலும்

எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ மனுதாரருக்கு மனம் இல்லை. மேலும் எதிர்மனுதாரருன் சேர்ந்து வாழ்ந்தால் மனுதாரரின் உயிருக்கும் குழந்தைகளின் உயிருக்கும் வாழ்க்கைக்கும் உத்திரவாதம் இல்லை என்ற நிலை நிரந்தரமாக ஏற்பட்டுவிட்டது. எனவே, எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து பெறுவதை தவிர, மனுதாருக்கு வேறு மார்க்கமில்லை. மனுதார் இதுபோன்ற மனுவை வேறு எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை. தாவா மனுவை சமர்ப்பிப்பதில் மனுதாருக்கும், எதிர்மனுதாருக்குமிடையே எவ்விதமான வஞ்சகக்கூட்டும் இல்லை. இந்நிலையில் மனுதாரரும் எதிர்மனுதாரரும் இனிமேல் சேர்ந்து வாழ எவ்வித வழியும் இல்லாததால் மனுதாரர் இந்த விவாகரத்து மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3) **<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

மனுதாரர் வழக்கில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் யாவும் பொய்யும் மோசடியுமானது. உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று. மனுதாரரின் வழக்கை எந்தவித சந்தேகங்களுக்கு இடமில்லாமல் நிரூபிக்க வேண்டியது மனுதாரரின் கடமையாகும். இந்த எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவை யாவும் கடுமையாக ஆட்சேபிக்கப்படுகின்றன. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.02.2011-ம் தேதி நடைபெற்ற திருமணம் மற்றும் திருமணத்தின் பயனாக 2 ஆண் குழந்தைகள் பிறந்தார்கள் என்பதையும் இந்த எதிர்மனுதாரர்

ஒப்புக் கொள்கிறார். திருமணத்திற்குப்பின் எதிர்மனுதாரர் மனுதாரரை குடித்துவிட்டு வந்து கொடுமை செய்வதுமான செயல்களில் ஈடுபட்டதாகவும் இதனால் மனுதாரர் தாங்க முடியாத மன வேதனையாலும் சொல்ல முடியாத கஷ்டத்திலும் மனதாலும், உடலளவிலும் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வந்துள்ளார் என்பதையும் பலமுறை மனுதாரர் ஊர் பெரியவர்களையும், வைத்து உறவினர்களையும் அழைத்து எதிர்மனுதாரருக்கு புத்திமதி கூறியும் எதிர்மனுதாரர் திருந்தாமல் தொடர்ந்து கொடுமைகள் செய்து வந்து, இச்சூழ்நிலையில் கடந்த 08.05.2018–ம் தேதி எதிர்மனுதாரர் அளவுக்கதிகமாக மது அருந்திவிட்டு வந்து நிலைக்கொள்ளா போதையில் மனுதாரரை மரியாதையாக வீட்டைவிட்டு ஓடிவிடு இல்லையென்றால் மனுதாரரை கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி குழந்தைகளுடன் வீட்டைவிட்டு துரத்தி வெளியேற்றிவிட்டார் என்பதையும் வன்மையாக மறுக்கின்றார். இதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் எதிர்மனுதாரரின் ஊரான ஆத்தூரில் வாழ்வது பிடிக்கவில்லை எனக் கூறி மனுதாரரின் ஊருக்கு வந்தால்தான் வாழ்வேன் என்று கூறியதால் எதிர்மனுதாரரும் மனுதாரரின் பேச்சை கேட்டு மனுதாரரின் ஊரான மேற்கண்ட முகவரியில் தனது பிள்ளைகளுக்காக சேர்ந்து மனுதாருடன் எதிர்மனுதாரர் வாழ்ந்துள்ளார். மனுதாரர் கோயம்புத்தூரில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதால் எதிர்மனுதாரரை 6 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ தனது பெற்றோர்கள் மூலமும், தானும் பலமுறை மனுதாரருடனும், மனுதாரரின்

பெற்றோரிடமும் பேசி எவ்வித பலனும் இல்லை. மனுதாரர் வீண் பிடிவாதம் செய்து கொண்டு எதிர்மனுதாரருடன் வாழ மறுத்து வருகிறார். தற்போது வரை எதிர்மனுதாரர் மனுதாருடன் சேர்ந்து வாழவே விருப்பமுடன் இருந்து வருகிறார்.

4) <u>**தீர்விற்கான பிரச்சினை யாதெனில் –**</u>

**" இம்மனுவில் மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா?**" என்பதேயாகும்.

**5)** இம்மனுவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளோ ஆவணங்களோ முன்னிடப்படவில்லை.

6) <u>**தீர்வு–**</u>

மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் , புனித பெரியநாயகி அன்னை தேவாலயத்தில் வைத்து 21.02.2011 ம் தேதி கிறிஸ்துவ மத முறைப்படி திருமணம் நடைபெற்றதாகவும், திருமணம் முடிந்த பிறகு மனுதாரரும், எதிர்மனுதாரரும், எதிர்மனுதாரர் வீட்டில் குடித்தனம் நடத்தி வந்ததில் கடந்த 18.11.2011 ம் தேதி அஜித் செல்வராஜ் என்ற ஆண் குழந்தையும், 05.04.2014 ந்தேதி கிங்ஸ்டன் என்ற ஆண் குழந்தையும் பிறந்துள்ளார்கள் என்பதும் குழந்தைகள் பிறப்பிற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து மனுதாரரை மனதளவிலும் உடலளவிலும் நெடுக துன்புறுத்துவந்து பின்னிட்டு

கடந்த 08.05.2018-ம் தேதி எதிர்மனுதாரர் அளவுக்கதிகமாக மது அருந்திவிட்டு வந்து நிலைக்கொள்ளா போதையில் மனுதாரரை மரியாதையாக வீட்டைவிட்டு ஓடிவிடு இல்லையென்றால் மனுதாரரை கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி குழந்தைகளுடன் வீட்டைவிட்டு துரத்தி வெளியேற்றிவிட்டார் என்றும், மனுதாரருக்கும் அவரது குழந்தைகளையும் பராமரிக்க எவ்வித பணமும் கொடுப்பதில்லை என்றும் ஒரு கணவனா மனைவிக்கும் குழந்தைகளுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் எதையும் எதிர்மனுதாரர் செய்யாததால் பின்னிட்டு மனுதாரர் தனது குழந்தைகளுடன் தனது பெற்றோர் வீட்டில் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், எதிர்மனுதாரரின் செயலால் மனுதாரர் உடலளவிலும் மனதளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இனிமேலும் இருவரும் சேர்ந்து வாழ்வதற்கான எவ்வித வாய்ப்பும் இல்லை என்றும், பெரியோர்கள் முன்னிலையில் சமரசம் பேசியதில் எவ்வித சமரசமும் ஏற்படவில்லை என்றும், எனவே, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.02.2011ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து உத்தரவாகவேண்டும் எனக் கோரி தனது வாதத்தை முன்வைத்துள்ளார்.

7) எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்தையும் குழந்தைகள் பிறப்பையும் ஒப்புக்கொள்வதாகவும், இது தவிர மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றும், மனுதாரர் கடந்த 4 ஆண்டு காலமாக கோயமுத்தூரில் உள்ள தனியார் கம்பெனி

ஒன்றில் வேலை பார்ப்பதாகவும், இந்த எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்றுவிட்டார் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

8) மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு மனுவில் கூறிய சங்கதிகளையே தனது முதல் விசாரணை சாட்சியத்திலும் எடுத்துரைத்து மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமண சான்றிதழ் அசலை ம.சா.ஆ.1 ஆகவும், திருமணபத்திரிக்கையை ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை நகலை ம.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்து, திருமணம் நடைபெற்று இரண்டு குழந்தைகள் பெற்ற பிறகில் இருந்து எதிர்மனுதாரர் மனுதாரரிடம் இணக்கமாக இல்லாமல் மனுதாரரை மோசமான வார்த்தைகளால் பேசி உடலளவிலும் மனதளவிலும் காயப்படுத்தி வந்து பின்னிட்டு வீட்டைவிட்டே குழந்தைகளுடன் மனுதாரரை துரத்திவிட்டதாகவும் அதன்பிறகு மனுதாரர் தனது குழந்தைகளுடன் தனது பெற்றோர் வீட்டில் இருந்து கஷ்ட ஜீவனம் செய்துவருவதாகவும், ஊர் பெரியவர்களை வைத்து சமரசம் பேசியதில் இருவரும் சேர்ந்து வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை என்றும் தற்போது சில ஆண்டுகாலமாக மனுதாரரும் எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் எதிர்மனுதாரர் எவ்விதக் காரணமும் இன்றி மனுதாரரை புறக்கணித்து வருவதாகவும், தனது கணவரிடமிருந்து தனக்கு விவாகரத்து வழங்க உத்தரவிடக்கோரி சாட்சியமளித்துள்ளார்.

9) எதிர்மனுதாரர் தனது குறுக்கு விசாரணையின்போது, மனுதாரரிடம் தாங்கள் இருவரும் 4 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருவது குறித்தும், எதிர்மனுதாரர் தன்னை அடித்து கொடுமைப்படுத்தினார் என்று காட்ட மனுதாரர் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பது பற்றியும், மற்றும் எதிர்மனுதாரருடன் மனுதாரர் வாழ பிடிக்காமல் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவில் எதிர்மனுதாரரும் விவாகரத்து கொடுக்க விருப்பமாக உள்ளார் என்றால் சரிதான் என்று எதிர்மனுதாரர் கேட்ட கேள்விகளுக்கு மனுதாரர் சாட்சியமளித்துள்ளார்.

10) இரு தரப்பு கேட்கப்பட்டது. இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர், புனித பெரியநாயகி அன்னை தேவாலயத்தில் வைத்து 21.02.2011 ம் தேதி கிறிஸ்துவ மத முறைப்படி திருமணம் நடைபெற்றது என்பது திருமண சான்றிதழ் , திருமண பத்திரிக்கை முறையே ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ன் மூலமாகவும் தெரிய வருகிறது. ஆக மனுதாரரும் எதிர்மனுதாரரும் தங்கள் திருமணத்தைத் தொடர்ந்து கணவன்–மனைவியாக தங்கள் இல்லற வாழ்க்கையை வாழ்ந்து வந்திருக்கும் விபரம் மேற்படி நடவடிக்கையில் இருந்து தெளிவாகிறது. திருமணத்தின பயனாக அவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளதும் இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் திருமணம் ஆகி இரண்டு

குழந்தைகள் பிறந்த பின்னிட்டு எதிர்மனுதாரர் மனுதாரரிடம் இணக்கமாக இல்லாமல் மது அருந்திவிட்டுவந்து மனுதாரருக்கு மனதளவிலும் உடலளவிலும் பெருத்த துன்பங்கள் செய்து வந்து பின்னிட்டு ஒருநாள் மனுதாரரையும் அவர்களது குழந்தைகளையும் வீட்டைவிட்டே விரட்டி விட்டதாகவும் அதன் பின்னர் மனுதாரரை எதிர்மனுதாரர் அழைக்கவில்லை என்றும், இத்தகைய சூழ்நிலையில் இனியும் இருவரும் சேர்ந்து வாழ்வதற்கான எவ்வித வாய்ப்பும் இல்லை என்றும் வாதம் முன் வைக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தனது எதிருரையில், மனுதாரரின் கூற்றிற்கு மறுப்பு தெரிவித்திருந்தாலும் சேர்ந்து வாழ்வது குறித்து எவ்வித கூற்றையும் முன்வைக்கவில்லை மேலும் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யும்போது *"எதிர்மனுதாரருடன் மனுதாரர் வாழ பிடிக்காமல் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவில் எதிர்மனுதாரரும் விவாகரத்து கொடுக்க விருப்பமாக உள்ளார் என்றால் சரிதான் "* என்று தனது விருப்பத்தை மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ததன் மூலமாக குறிப்பிட்டுள்ளார். எனவே, இந்த மனுவில் அமைந்திருக்கும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களையும் காணும்போது, எதிர்மனுதாரர் மனுதாரரை விட்டு எவ்வித காரணமும் இன்றி பிரிந்து வாழ்ந்து வருகிறார் எனக் கூறியுள்ள நிலையிலும், எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமிருப்பதாக கூறாதநிலையிலும், திருமணமாகி 12 வருடங்களுக்கு பின்னிட்டு தொடர்ந்து இருவருக்குள்ளும் ஏற்பட்டுள்ள மன உளைச்சலையும் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, இனியும் இவர்கள் சேர்ந்து வாழும் சூழ்நிலை

இருப்பதாக அறியமுடியவில்லை. ஆகையால், மனுதாரர் கோரும் விவாகரத்து பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 21.02.2011 ம் தேதி திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர், புனித பெரியநாயகி அன்னை தேவாலயத்தில் நடைபெற்ற திருமணம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை வழங்கப்படவில்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் வருடம் ஏப்ரல் திங்கள் 27 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.04.29 10:45:36 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

இணைப்பு :

**மனுதாரர் தரப்பு சாட்சி–**

ம.சா.1 திருமதி பாத்திமா தேன்மொழி (மனுதாரர்)

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 21.02.2011 | திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் , புனித பெரியநாயகி அன்னை தேவாலயத்தில் கொடுக்கப்பட்ட திருமண சான்றிதழ். |
| ம.சா.ஆ.2 | 21.02.2011 | மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் – அசல் |
| ம.சா.ஆ.3 | -- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல். |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** :

**– இல்லை –**

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.04.29 10:45:42 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்
IDOP No-**73 / 2023**
நாள்-27.04.2026
<u>அசல்/நகல் உத்தரவு</u>